## ‘கிளம்பிற்றுகாண் தமிழச் சிங்கக் கூட்டம்’ என கிருஷ்ணன் கோயிலில்

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை கேட்கத் திரண்ட மக்கள் வெள்ளம்!















கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.3.2024) விருதுநகர் மாவட்டம், கிருஷ்ணன்கோயிலில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் விருதுநகர் வேட்பாளர் மாணிக்கம் தாகூர், தென்காசி வேட்பாளர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோரை அறிமுகப்படுத்தி ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, மாவட்ட கழகச் செயலாளர்கள் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, ஜெயபாலன், மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கபாண்டியன், பழனி நாடார், அசோகன், ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் குமார் உள்ளிட்ட முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.